<u>முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், அரியலூர்</u>

வா.சா.1– லெட்சுமி OS.No.17/2025 நாள் :20.07.2026

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எனது பிறந்த ஊர் சோழன்குடிகாடு, திருமணம் ஆனது சேடக்குடிகாடு. நான சேடக்குடிகாட்டில் மேல்த்தெருவில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது கணவர் ஆதிமூலம் இறந்து 16 வருடம் ஆகிறது. எங்களுக்கு 3 குழந்தைகள் என்றாலும், அவர்கள் மூவரும் திருமணம் ஆகி வெளியூரில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன், 4 ஏக்கர் முந்திரியும் வைத்திருக்கிறறேன். 1 ஏக்கர் முந்திரியில் 1 மூட்டை முந்திரி கிடைக்கும் என்றால் சரிதான். வருடத்திற்கு செலவு போக 4 ஏக்கரிலும் சேர்த்து, எவ்வளவு வருமானம் வரும் என்றால் செலவு போக 30 ஆயிரம் வரும். நான் குடியிருப்பது சொந்த வீடு. எனக்கு மாதத்திற்கு குடும்ப செலவு ரூ.3000 ஆகும். எனக்கு முந்திரியில் இருந்து வரும் வருமானத்தை வைத்து வீட்டு செலவு செய்து வருகிறேன் என்றால் சரிதான். மாலதியின் கணவர் பெயர் சங்கர். அவர்களுக்கு குழந்தைகள் உள்ளனரா என்றால் இருக்கிறார்கள். சங்கருக்கும் எனக்கும் தொடர்பு உள்ளது என்று ஊரில் பஞ்சாயத்து நடந்ததா என்றால் அது பற்றி தெரியவில்லை, என்னிடம் அது பற்றி யாரும் பேசவில்லை, எனக்கும் சங்கருக்கும் தொடர்பு எதுவும் இல்லை. இறந்துபோன சங்கருக்கும் எனக்கும் தொடர்பு இருப்பதாக சொல்லி ஊரில் பஞ்சாயத்து செய்தார்கள் என்றாலும், நான் அதில் கட்டுபடவில்லை என்றாலும் சரியல்ல. சங்கர் இறக்கும் வரை எனக்கும் அவருக்கும் தொடர்பு இருப்பதாக சொல்லி பிரதிவாதி தகராறு செய்து வந்தார் என்றால் அது பிரதிவாதி மாலதியால் ஜோடிக்கப்பட்டது. சங்கரின் சொத்துகளை பிரதிவாதிகள் அடையக் கூடாது என்பதாற்காக நானும் சங்கரும் சேர்ந்து சொத்துக்கள் பொருத்து ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. எழிலரசி, ராஜகுமாரி ஆகியோர் புரோநோட்டில் சாட்சி கையெழுத்து போட்டிருக்கிறார். அவர்கள் இருவரும் பொன்பரப்பி கிராமத்தை சேர்ந்தவர்கள். எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தெரிந்தவர்கள் தான். புரோநோட்டை எழுதியது முருகேசன். சாட்சி கையெழுத்து போட்டவர்களின் கணவர்/அப்பா பெயர், விலாசம் புரோநோட்டில் எழுதப்பட்டிருக்கிறாதா என்றால்

இல்லை. எனக்கு வங்கி கணக்கு உள்ளது. நான் புரோநோட்டு படி கொடுத்த கடன் தொகையை எப்படி கொடுத்தேன் என்றால் நிலம் விற்ற காசிலிருந்து கொடுத்தேன். நிலம் விற்றதற்கும் அதிலிருந்து எனக்கு பணம் வந்ததற்கும் ஆதரவு உள்ளதா என்றால் உள்ளது. நிலம் விற்ற பணத்தை நான் ஏன் சங்கருக்கு கடனாக கொடுத்தேன் என்றால் அவருக்கு கடன் இருக்கிறது என்பதற்காக கொடுத்தேன். புரோநோட்டில் கடன் தீர்ப்பதற்காக பணம் பெற்றதாக எழுதப்பட்டிருக்கிறதா என்றால் எழுதப்பட்டிருக்கிறது. எனக்கு 9 இலட்சம் கொடுப்பதற்கு வசதியோ வருமானமோ கிடையாது என்றாலும், என் குடும்ப செலவிற்கே எனக்கு கஷ்டம் என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் பிரதிவாதிக்கும் உள்ள குடும்ப பிரச்சனைகளை வைத்து அவர்களின் சொத்துக்களை அபகரித்து பழி வாங்குவதற்காக வா.சா.1 புரோநோட்டை ஜோடித்து பிரதிவாதிகள் மீது வழக்கு போட்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லுவதும் தாவா புரோநோட்ம் பொய்யானது என்பதால் வழக்கு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை–</u>**இல்லை.

(ஒம்) – திருமதி.T.மலர்வாலண்டினா,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
அரியலூர்.